# விடியல்

## The Dawn

இதழ்-115, நவம்பர் -2018

**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வி.சந்திரன்

## குழந்தைகள் தினம் நவம்பர் 14

உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு தினம் கொண்டாடப்படுகிறது. அதில் மகிழ்ச்சியான தருணங்களும், துக்ககரமான நினைவுகளும் கலந்தே இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14-ஆம் நாள் நாடு முழுவதும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு. இவர் பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

நேரு குழந்தைகள்மீது அதிக அன்பு கொண்டிருந்ததால் அதனை நினைவுபடுத்தும் வகையில் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
I N D I A
Knowledge is Power

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

கட்டுப்பாடுகளுடன் வளர்த்தால்தான் குழந்தைகள் நன்றாக வளர்வார்கள் என்று பல பெற்றோர்கள் நினைக்கிறார்கள். ஆனால், குழந்தைகளை சுதந்திரமாக விடவேண்டும் என்பதே ஆய்வாளர்களின் அறிவுரையாக இருக்கிறது.

அதே நேரத்தில் சரியான பழக்கங்களைக் கற்றுக் கொடுக்காமல், தான்தோன்றியாக விட்டுவிடுவதால் பலரின் வாழ்க்கை வழிமாறிச் சென்று விடுகிறது. குழந்தைகளை வளர்க்கும் போது, குழந்தைகள் மொழியில் நல்ல கருத்துகளை எடுத்துக் கூறினால் அவர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொண்டு சாதனை செய்வர் என்பது திண்ணம்.

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது” - என்ற பழமொழிக்கு ஏற்றாற் போன்று குழந்தைகளுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வளர்க்க வேண்டும். குழந்தைகள் மத்தியில் பெற்றோர்களும் குழந்தைகளாக மாறினால்தான் நாளை அவர்கள் வெற்றியாளராக மாற முடியும்.

பாரத நாட்டின் பிரதமராகத் திகழ்ந்த நேரு அவர்கள் தம் நாட்டு மக்களிடமும் குழந்தைகளிடமும் பேரன்பு கொண்டிருந்தார். இவர் குழந்தைகளிடம் இருக்கும்போது தம் கவலைகளை மறந்து விடுவார். இந்நிலை நேருவுக்கு மட்டுமல்ல நம் அனைவரும் மழலை மொழியில் மெய்மறப்பது நிதர்சனம். “குழல் இனிது, யாழ் இனிது என்பர், மழலைச் சொற் கேளாதோர்” என்பது ஆன்றோர் வாக்கு. மழலை சொற்களை விட பேரானந்தம் அளிக்கக்கூடிய சொற்கள் இவ்வுலகில் வேறில்லை எனலாம். மகளிர்க்கு குழந்தைப்பேறு பெற்றுத்தரும் உயர்நிலையானது இதனை மேலும் வலியுறுத்துவதாக அமைகிறது.

நேரு கொண்டாடிய குழந்தைகளை நாமும் எந்நாளும் கொண்டாடுவோம். குழந்தைகளை குழந்தைகளாகவே வாழ விடுவோம். நவநாகரிக வாழ்க்கை, முன்னேற்றம், மீடியா அலை போன்ற மாயைகளால் இன்றைய குழந்தைகள் தம் மழலை தன்மையிலிருந்து மாறுபட்டும், மழலைத்தனத்தை மறந்தும் பல துறைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இல்லையெனில் பெற்றோர்களாலும் உறவினர்களாலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்நிலை குழந்தைகளை மேம்படுத்தும் எனினும் அவர்கள் மழலை வாழ்வியலின் இனிமைகளை அனுபவித்தறியாத பரிதாப நிலைக்கு தள்ளப்படுவர் என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

“ஒரு குழந்தை நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” என்பது திரைமொழி வழக்கானாலும் வீடும், அன்னையும் அளிக்காத படிப்பினையையும் பழக்கங்களையும் சமூகம் அளிக்கும். இவற்றில் நல்லவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு வாழ்வில் வெற்றிபெறும் வழிகளைக் கற்கும் வழிமுறைகளை பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவது அவர்களின் கடமைகளில் ஒன்றாகும். நாளைய தலைமுறை நாயகர்களான இன்றைய குழந்தைகளைப் போற்றி வளர்ப்போம்... வளம் பெறுவோம்..

-இணையாசிரியர்

## குழந்தைகள் தினம்


கவிதைகள்…………………. …5 - 17

வேளாண்மை………………..……17 – 20

ம.பொ.சிவஞானம்………………20 –21

கொடுத்து மகிழ்வோம் - விழா…21- 23

பார்த்தீனியம்……………………23 -24

பொது அறிவு வினா- விடை…..24 -26

விடுகதைகள்..…………………27

கவிதைகள்……………………28 - 32

# கவிதைகள்

## ஏழ்மை

ஒரு பிச்சைக்காரன்
தட்டில் இருக்கும்
சோற்றை

அவன் கண்முன்
காணும் நாய்க்கு
அவன் வழங்கினால்
புகைப்படம் எடுத்து
'Humanity' என்பார்கள்..

நாய் தின்னும் சோற்றை
உணவுண்டு பல நாளான
பிச்சைக்காரன் உண்டால்
புகைப்படம் எடுத்து
'Poverty' என்பார்கள்..

பித்து சமூகத்தின்
மிச்ச வழித்தடத்தில்
ஏழ்மையை ஒழிக்கிறேன்
என்று
ஏழ்மையை வளர்க்கும்
மிச்ச மனிதம்..
இதனிடையே

ஏழ்மையைப் பார்த்து
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண் என்று
சித்தாந்த தத்துவம் மொய்க்கும்
ஞான கிறுக்கர்கள்..

இவையனைத்தையும்
காணும் பொழுதில்
ஏழ்மையை வளர்க்க
நீயும் துணைபோகாதே என்ற
எண்ணத் தூவல்கள்
நிகழ்கிறது என்னுள்..

இதனை
அன்றே உணர்ந்த
சீன அறிஞன் கன்.ஃ.பூசியஸ்
இப்படிச் சொல்கிறான்

"In a country well governed
Poverty is something to be
Ashamed of in a country badly
Governed, wealth is something
To be ashamed of"

மா.நவீன்
இளங்கலை ஆங்கில இலக்கியம், மூன்றாமாண்டு

## அப்பா

பலகாரம் நான் ருசிக்க
பழைய கஞ்சி நீ குடித்தாய்
பட்டப்படிப்பு நான் படிக்க
பகலிரவு பாடுபட்டாய்
சிறப்பாக நான் வாழ
சீமையெல்லாம் கடன்பட்டாய்
சொந்தமெல்லாம் கைவிரிக்க
சொந்த காலில் நின்று ஜெயித்தாய்
நல்ல பெயர் நூறு பெற்று
சொத்தென சேர்த்து வைத்தாய்
ஊரார் உந்தன் பிள்ளை என்று
சொல்ல என் உள்ளங்களை நெகிழ வைத்தாய்
புத்திமதி ஒன்றை மட்டும்
வேதமென கற்றுத் தந்தாய்
என்னைப் போல பிள்ளை
ஊருக்கு நூறு உண்டு
உன்னைப் போல அப்பா
என்னைத் தவிர யாருக்குண்டு...

சு.ஜனனி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## விவசாயி

கருமேகங்களைக் கண்குளிரப் பார்த்து
கண்ணீருடன் சேர்த்து
வானத்தைப் பார்த்து அழுதாய்

பார்த்தால் என்னமோ?
உன் நண்பன் உப்பில்லாத
கண்ணீரை உனக்காக வழங்கினான்
அவன் வழங்கியதால்
நீ வணங்குவதை விடவில்லை
நீ வணங்குவதை விட்டாலும்
அவன் வழங்குவதை விடவில்லை
நீ வறட்டி எனும் குளிரில்
நடுங்கிக் கொண்டிருந்தபொழுது
உன் நிலமெங்கும்
பச்சைப் போர்வையை போர்த்தி காத்தான்
உன் நண்பனான மழை
கீழே விழும் பொழுது
காப்பாற்ற யாருமில்லை
ஆனால் உன்னைக் காப்பாற்ற
அவன் மட்டுமே உள்ளான்
உயிருடன் உரத்தையும்
மண்வெட்டியுடன் மனத்தையும்
சேற்றுடன் உணவுக்காக நீராட்டினாலும்
இன்னும் நீ சோற்றுக்கு
போராடிக் கொண்டுதான் உள்ளாய்
கடவுள் இல்லை என்பவனும்
உன் காலடியில் விழுவான்
கடவுளைக் காண காலம் வரும்....

க.ஹரி கிருஷ்ணா
இளம் அறிவியல் வேதியியல் இரண்டாமாண்டு

## விவசாயி

விவசாயம்...
தொழில் அல்ல
தமிழனின்
வாழ்வியல் கலை...
உணவை நமக்கு அளித்து
அவன் வயிற்றில்
ஈரத்துணி கட்டுவான்...
துணியின் ஈரம் காய்வதற்குள்
வயிற்றில் அடிக்கும் அரசு கடன்...
இருந்தும் இருந்தான்
நமக்கு உணவளிக்க...
பாதத்தின் வலி எண்ணி
சேற்றில் கால் வைக்க மறுத்தால்...
மறுநாள் நம் நிலைமை என்னாகுமோ...!

செ.கமலீஸ்வரி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## நட்பு

நட்பிற்குப் பிரிவு உண்டோ
ஏன் என்று தெரியவில்லை...!!
எப்பொழுதும் இனிமையாக
போகும் என் பயணம்

இப்பொழுது சோகத்தைத்
தருகிறதே…

மலர்களைப் போன்று பூத்துக்
குலுங்கும்
மாணவர்கள் என்னும்
அடையாளத்தில்
மறக்க முடியாத நினைவுகளைத்
தந்து
மனத்தை வாட்டுவது ஏனோ???

நட்பென்னும் பெயரில்
நாட்கள் நன்றாகக் கடக்க,
காதலைக் கூட மிஞ்சிய நட்பின்
பெருமை என்றும் நிலையானது…
நினைவினில் இனிமையே
தருவது…

நேர காலங்கள் நம்மை
பிரித்தாலும்
நெஞ்சில் இருக்கும்
நினைவுகள்,
நம்மைப் பிரிய விடுவதில்லை..
கடலுக்குக் கரை உண்டு
நம் நட்புக்கும் நினைத்தால்
சந்திக்கும் சந்தர்ப்பங்கள் பல
உண்டு…

நம்பிக்கையுடன்,

நம் நட்பின் நினைவுகளுடன்

நான்...!!!

தமிழ்ச்செல்வி

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## கடற்படை

நீல நிறத் தாய்
நீராக இருந்தாலும்
நிறை மனதைக்
கொண்டு சென்றாய் நீ
உப்புடன் உறவாடிக் கொண்டும்
கப்பலுடன் போராடிக் கொண்டும்
உயிருடன் விளையாடிக் கொண்டும்
உன் வாழ்க்கை
பயணம் செய்கிறது...

உன் சோகத்தைக் கண்டு
கண்ணீர் விட்டதால் என்னமோ
புயல் எனும் கடற்கொள்ளையனை
எதிர்க்கத் தூண்டில் இறையாய் உள்ளாய்!
உறவுகளை மறந்து
கடலில் சிறையாய் உள்ளாய்
உறவை இணைக்க
உயிரைப் பிணைக்க
ஒவ்வொரு நாளும் ஆபத்தை

அணைத்துக் கொண்டு வாழ்கிறாய்
கயிறுடன் உயிரைச் சேர்த்து
ஒரு கரத்தைக் கொடுத்து
பல கரத்தைக் காப்பாற்றினாய்
உன்னைப் போற்றும் தினம்
தினமே
கடற்படை தினம்...

க.ஹரி கிருஷ்ணா
இளம் அறிவியல் வேதியியல் இரண்டாமாண்டு

## அம்மா

கல்லாய் இருந்த என்னை
சிலையாய் செதுக்கினாய்!
கரியாய் இருந்த என்னை
வைரமாய் உருவாக்கினாய்!
வற்றிய வாய்க்காலாய் இருந்த என்னை
வற்றாத நதியாக்கினாய்!
துன்பத்தை எல்லாம்
நீ எடுத்துக் கொண்டு
இன்பத்தை மட்டும் எனக்களித்தாய்
இதற்கு ஈடாய் எதைத் தருவது
அம்மா என்ற நாமத்தைத் தவிர...

ஞா.ஜீவிதா
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## காலத்தின் கோலமே

வண்டெனப் பறந்து
வாலிபர் உலகில்
தொண்டு புரிந்தவன்
தூயத்தமிழ் மகன்
கண்டு களித்தவர்
விழிகள் இமைக்குமுன்
கொண்டு மறைத்தது
காலத்தின் கோலமே!
மலரினும் மென்மையன்
வானினும் தூய்மையன்
அலையினும் ஓய்விலான்
ஆற்றினும் கடுகலான்
நிலையினிற் செம்மையான்
நினைவினிற் பசுமையான்
தொலைவழி போயினும்
தோற்றுவான் நெஞ்சிலே!

ப.விஜயசித்ரா
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## முயற்சி

முயற்சி என்பது
நான்கெழுத்து மந்திரச் சொல்
ஆனால்
நடந்து செல்லும் பாதையில்

ஆயிரம் தடை
முயற்சி செய்பவன்
முத்திரை படைக்கிறான்
முயலாதவன்
முட்டாள் ஆகிறான்

முள்ளோ மலரோ
முயன்று பார்
முயலாமை என்பதைக்
கடந்து பார்
கடந்த பாதையைத்
திரும்பிப் பார்
நீ அடைந்திருப்பாய்
வெற்றி என்னும் இலக்கை
மூச்சில் கூட முயற்சி வேண்டும்
முப்பொழுதும் முயற்சி செய்திடு...

ஐஸ்வர்யா
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## பள்ளி

பள்ளி என்ற பார்வையில்
கல்வி என்ற கரையில்
நாம் என்ற சொல் உரைக்க
நமக்கு என்ற சொல் இணைக்க
பரிச்சை என்ற சொல் பேச

முடிவு என்ற சொல் பிரிக்க
கல்லூரி என்ற சொல் அழைக்க
பசுமை என்ற பொற்காலம்
பாதியில் விட்டுவிட
நம் பள்ளி பாசத்திற்கு
பிரியாவிடை கொடுப்போம்...

நவீன்
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## அறிவு

வெறி கொண்டு
அரிவாளைத் தீட்டும்
பொழுதெல்லாம்
மழுங்குகிறது
அறிவு

ம. பூபாலன்
இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு

## நட்பு

என் மனம் வாடும் நேரங்களில்
என்னை ஆறுதல்படுத்தவும்
நான் துயரங்களில்
துவண்டு விடும் வேளைகளில்
என்னைச் சோர்வடைய விடாமல்
தோள் சாய்த்து
உற்சாகப்படுத்தவும்...

என் கண்கள் கலங்கிடும் முன்பே
என்னைக் கலங்க விடாமல்
பாதுகாக்கவும்...
நான் தோல்விகளை சந்திக்கும்
போதெல்லாம் எனக்காக வேதனைப்படவும்...
நான் வெற்றிகளைப் பெற்றிடும் போது
மனதார வாழ்த்திடவும்...
எனக்கும் ஒரு நண்பன் இருக்கின்றான்...

மோ.மோனிஷா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## அம்மா

நான் எழுதும் கவிதை
பேனா முனையில் இருந்து
வரும் வர்ணங்கள் அல்ல.
என் இதயத் துடிப்பில் இருந்து
வரும் சப்தங்கள்.
தாமரை இருப்பது தண்ணீரில்
என் உயிர் பிரிவது
என் அன்னையின் கண்ணீரில்.
ரோஜா வாடினால் தண்ணீர் விடுவேன்.
என் உள்ளம் வாடினால் கண்ணீர் விடுவேன்.
என்றும் என் அம்மாவின் நினைவோடு நான்...

கு.முத்துமணி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# பாரதி

அச்சம் தவிர்த்து
ஆண்மை தவறாமல்
ஏறுபோல் நடந்து
கொடுமையை எதிர்த்து நின்று
சரித்திர தேர்ச்சி கொண்டு
சாவதற்கு அஞ்சாமல்
சீறுவோர்ச் சீறி
செய்வது துணிந்து செய்து
சொல்வது தெளிந்து சொல்லி
நெற்றி சுருக்கிடாமல் நேர்படபேசி
நையப்புடைத்து
பிணைப்பினைப் போற்றாமல்
புதியன விரும்பி
பெரிதினும் பெரிது கேட்டு
போர்த்தொழில் பழகி
மானம் போற்றி
ரௌத்திரம் பழகி
வீரியம் பெருக்கி
வெளிப்படப் பேசி
வையத் தலைமை கொண்டு
தமிழாலும் தமிழுக்காகவும்
வாழ்ந்தானே ஒருவன்
அவன் தான் பாரதி...

A.மௌனிஷா
இளங்கலைத்தமிழ் முதலாமாண்டு

# வேளாண்மை

வேளாண்மை என்ற வார்த்தை 'Agricultur' என்ற லத்தின் வார்த்தையின் ஆங்கிலத் தழுவலாகும். முற்காலத்திலிருந்து "ஒரு நிலம்" மற்றும் கலாச்சாரம், "சாகுபடி" ஆகியவை "நிலத்தில் பயிரிடுதல்" என்ற அர்த்தத்திலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது. எனவே, இந்த வார்த்தைக்கான நேரடி அர்த்தம் "நிலத்தில் பயிர் செய்தல்" என்பதாக இருக்கிறது.

வேளாண்மை என்பது உணவு மற்றும் வேறு உபயோகங்களுக்காக சிலவகைப் பயிர்களை உற்பத்தி செய்வதையும், வீட்டு மிருக வளர்ப்பையும் குறிக்கும். வேளாண்மை வீட்டு வளர்ப்புப் பிராணிகள் மற்றும் தாவரங்களின் உதவியைக் கொண்டு நகரகங்களுக்கு வழி வகுத்திட்ட முக்கியமான வளர்ச்சியாகும். உணவு உபரிகளை உருவாக்கிக் கொள்வது அடத்தியான மக்கள் தொகை அடுக்கு விவசாயத்தைப் பற்றிய ஆய்வு என்பது வேளாண் அறிவியல் எனப்படுகிறது. இது சார்ந்த தாவர வளர்ப்பு **தோட்டக்கலை** எனப்படுகிறது.

## வேளாண்மை காப்போம்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். நம் நாடு அடிப்படையில் ஒரு விவசாய நாடு. பண்டையக்காலந் தொட்டே விவசாயமே நம் நாட்டின் முக்கியத் தொழிலாகும். விவசாயம் இன்றேல் நம் நாட்டில் ஏதுமில்லை. அத்தகைய விவசாயிகளின் பெருமையை இன்றைய மாணவருலகம் அறியச் செய்வது ஆசிரியர்களின் தலையாய கடமை ஆகும்.

பொறியியல், மருத்துவம், கணிப்பொறி ஆகிய இவற்றின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கும் மாணவர்களில் விவசாயம் படிக்கும் மாணவர்களும் உள்ளனர். அறிவியல் முறைப்படி விவசாயம் செய்து நன்முறையில் நாட்டையும் வீட்டையும் காப்பாற்ற இயலும் என்பதை அறியச் செய்வோம்.

இந்தியா ஒரு விவசாய நாடு என்பது நாம் எல்லாரும் அறிந்ததே. விவசாயத்தின் உற்பத்தித்திறன் குறைந்து கொண்டு வருகிறது. உற்பத்தித் திறன் குறைவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று விவசாய நிலத்தில் உள்ள மண்ணின் தன்மை முழுவதுமாகக் கெட்டுப் போகக்கூடிய நிலையில் உள்ளது. விவசாயிகள் பயன்படுத்துகின்ற செயற்கை உரங்கள் மண்ணின் தன்மையை முற்றிலுமாக மாற்றிவிட்டன. மற்றொன்று அரசின் அலட்சியம், விவசாய வளர்ச்சிக்கு உண்மையான பலன் தரக்கூடிய செயல்களை விட்டுவிட்டு குறுகிய நோக்கில், அரசியல் ஆதாயம் தேடும் நோக்கிலேயே இன்று வரை அத்தனை அரசுகளும் செயல்பட்டுள்ளன. சமீபத்தில் கூட 72000 கோடி ரூபாய் விவசாய கடனை தள்ளுபடி செய்தார்கள்.

உழவர் அல்லது விவசாயி என்பவர் நிலத்தில் உழுது விவசாயம் அல்லது வேளாண்மை செய்வார்கள். பண்டைத் தமிழகத்தில் உழவர் மிகவும் உயர்ந்தவராக மதிக்கப்பட்டார். **சுழன்றும் ஏர் பின்னது உலகு** என உழவுத்தொழில் பாராட்டப்பட்டது. ஆயினும் நிலக்கிழார்களின் ஆதிக்கத்தின் கீழ் கடத்திய சில நூற்றாண்டுகள் அவர்களது நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இதனிலிருந்து மீட்டு பல உழவர் இயக்கங்கள் உலகெங்கும் தோன்றின. உழுகின்ற உழவருக்கு இடைத்தரகர்கள் மூலம் சரியான விலை கிடைக்காதிருந்ததைத் தவிர்க்க தமிழக

அரசு உழவர் சந்தை என்ற நேரடி சந்தை முறையினை அறிமுகப்படுத்தியது.

**காலனிய இந்திய விவசாயிகள்:**

ஐந்து நூற்றாண்டுகள் அரசாண்ட இஸ்லாமியர் ஆட்சியின் போது கிராமப்புற வாழ்க்கை சிறிதும் மாறவில்லை. ஆனால் ஆங்கிலேயர் அரசாட்சி தன்னிறைவு பெற்றிருந்த கிராமங்களை சிதைத்து மக்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்கியது. இந்திய மன்னர்கள் நிலத்திலிருந்து கிடைத்த விளைச்சலில் 1‘6 பங்கு அல்லது 1‘4 பங்கு என நிலவரியை விளை பொருளாகவே வசூலித்தன. எனினும் வேளாண்மைத் தொழிலை இயற்கையோடு இயைய நிகழ்த்தும் முறைகளாக நிலைகொள் வேளாண்மை மற்றும் உயிரி வேளாண்மை என்பவை இன்று நடைமுறைக்கு வந்துள்ளன.

க.ரிஷா

இளம் அறிவியல் உயிரிவேதியியல் முதலாமாண்டு

## சிலம்புச் செல்வர்
## *ம.பொ.சிவஞானம்*

இவர் இந்தியாவைச் சேர்ந்த விடுதலைப் பேராட்டக்காரரும் சிறந்த தமிழறிஞரும் ஆவார். இவர் சிலம்பின் மீது கொண்டிருந்த ஆளுமையின் காரணமாக சிலம்புச் செல்வர் என அழைக்கப்பட்டார். 2006-ஆம் ஆண்டில் இவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக அரசு இவரது நூல்களை நாட்டுடைமையாக்கிச் சிறப்பித்தது.

இவர் மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் என்ற பெயரை சுருக்கி ம.பொ.சி என அழைக்கிறோம். ஜுன் 26 1906 ஆம் ஆண்டு சென்னை விளக்குப் பகுதியிலுள்ள சால்வன் குப்பம் என்ற பகுதியில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். எனவே 3-

ஆம் வகுப்போடு படிப்பை முடித்து நெசவுத் தொழில் செய்தார். பின்னர் அச்சுக் கோக்கும் பணியில் சேர்ந்தார். இவர் 31-ஆம் வயதில் திருமணம் செய்தார். இவர் சிறந்த சொற்பொழிவாளராக இருந்தார். மேலும் 700 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தார். அப்பொழுது சிலப்பதிகாரத்தை முழுமையாகக் கற்றார். இதன் காரணமாக இவருக்கு 'சிலம்புச் செல்வர்' என்ற சிறப்புப் பெயரை ரா.பி. சேதுப்பிள்ளை வழங்கினார்.

சிறையில் இவர் இருந்த போது தீராத வயிற்று வலி ஏற்பட்டது. வாழ்நாளின் இறுதிவரை அவரை அந்த வயிற்று வலி வதைத்தது. இவரது 89-வது அகவையில் 3-10-1995 அன்று இம்மண்ணை விட்டு நீங்கினார்.

சீ. மோகனப்பிரியா

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## *கொடுத்து மகிழ்வோம் - விழா*

ஓர் அழகிய பசுமை நிறைந்த கிராமம். அழகிய பச்சை பசேல் என்று காணப்படும் இயற்கை எழில் கொஞ்சும் பூமி. அவ்வாறான கிராமத்தின் நடுவே சூரியனைப் போன்று பிரகாசமளிக்கும் ஓர் அழகிய பள்ளி. அந்த அழகிய பள்ளியில் கொண்டாடப்பட்ட ஒரு விழா. பல ஏழை குழந்தைகள், அனாதை இல்லம் என்று பல ஊர்களில் பல ஆதரவற்றோர், குழந்தைகள் உள்ளனர். நம் கண்ணில் பல ஏழை மாணவர்கள், குழந்தைகள் தென்படுகின்றார்கள். அவர்களுக்கு நாம் உதவியது உண்டா? அப்படிபட்டவர்களுக்கு உதவி செய்யும் விழாதான் "கொடுத்து

மகிழ்வோம் விழா'' ஒரு பள்ளி என்றாலே 1500, 1000 மாணவர்கள் இருப்பார்கள் அல்லவா. அவர்கள் எப்படி இந்த விழாவை கொண்டாடுகிறார்கள் என்பதை இக்கதையில் காண்போம்.

சூரியன் பிரதிபலிக்க அழகிய காலைப் பொழுதில் எறும்புகளைப் போல சுறுசுறுப்பாக பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் வேலை செய்து கொண்டிருந்தனர். தலைமையாசிரியர் அவர்கள் அனைவரையும் ஓர் அழகிய தாயைப் போல வழி நடத்தினார். மாணவர்களும், ஆசிரியர்களும், மைதானத்தில் கூடினர். கொடுத்து மகிழ்வோம் விழா தொடங்கியது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியை நடத்துவர். (பானை உடைத்தல், கபாடி, கைப்பந்து, மெதுவாக சைக்கில் ஓட்டுதல், தண்ணீர் நிரப்புதல்) மாணவர் ஒரு கையில் சிறிய மணியும், மற்றொரு கையில் குடையையும் பிடித்து கொண்டு தடையைத் தாண்டுதல், டம்ளார் அடித்தல். (3 பந்துகள் மட்டுமே) ஒரே தீக்குச்சியில் 10 மெழுகுவர்த்தி ஏற்றுதல் போன்ற விளையாட்டுகளும்.

ஆசிரியர்கள் தங்கள் கையால் செய்த (கேசரி, வடை, பாயாசம், மெதுவடை, தேனீர், குளிர்பானம்) போன்றவற்றையும் மாணவர்களிடம் விற்பர். மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற, உணவு வகைகளை வாங்க "டோக்கன்" பயன்படுத்துவர். பணம் செலுத்திப் பெற வேண்டும். இவ்வாறு பெரும் பணம் அப்படியே ஒரு அனாதை இல்லத்திற்குக் கொடுக்கப்படும். இவ்வாறு அந்தப் பள்ளி சேர்த்த பணத்தொகை 10,000 முதல் 15,000 ரூபாய் ஆகும்.

ஒரு சிறிய பள்ளியே ஏழை மாணவர்களுக்கு உதவ ஒரு நாளையே கொண்டாடும் போது நாம் என்ன செய்யப்போகிறோம்.

ஏழை மாணவர்கள், குழந்தைகளுக்கு நாம் உதவ ஒவ்வொருவரும் அவர் அவர் ஊரில் இது போன்ற விழாவை கொண்டாடினால் பெரும்பான்மை குழந்தைகளின் வாழ்க்கை மேம்படும்.

விழா என்பது நாமும் நம் உறவினரும் மட்டும் மகிழ்ந்தால் போதாது. உன் அருகில் உள்ள ஏழைக் குழந்தைகளும் மகிழ்வது தான் உண்மையான விழா.

ஒரு ஏழையின் முகத்தில் தோன்றும் சிரிப்பு தான் இந்த உலகின் முதல் விடியல்...

“நீ கொடுப்பாய் ஏழைகள் மகிழ்வார்கள்“ இதுவே கொடுத்து மகிழ்வோம் விழா.

கு.மனோஜ்குமார்

இளங்கலைத் தமிழ் இரண்டமாண்டு.

## *பார்த்தீனியம்*

இயற்கை மனிதர்களுக்கு அளித்துள்ள கொடைகளில் தாவரங்களும் உண்டு. இத்தாவரங்களில் நன்மை செய்யும் தாவரங்கள் ஏராளம். நன்மை என்று இருந்தால் தீமையும் அதனுள் இருக்கும். அத்தகைய தீமை செய்யும் தாவரம் தான் பார்த்தீனியம் என்ற ஒன்று. இது செடியாய் இருந்தாலும் பூக்கள் நிறைய உண்டு. அந்த பூவில் உள்ள மரகந்தத்தூள் மனிதனின் உடலில் பட்டால் உடல் முழுவதும் ஒவ்வாமை ஏற்பட்டு உடலில் அரிப்பு தோன்றும். மற்றும் ஆடு, மாடு போன்ற வளர்ப்பு பிராணிகள் உட்கொண்டால் வயிற்றுப் போக்கு போன்ற உபாதைகள் உண்டாகி விலங்குகள் மரணம் அடையவும் வாய்ப்பு

உண்டு. எனவே அவ்வகையான செடிகளைக் கண்டால் உடனடியாக அதை வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும்.

இதைக் காலஞ்சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு 'அம்மா' என அழைக்கப்படும் செல்வி ஜெயலலிதா அவர்களும் சட்டசபையில் இந்த பார்த்தீனியம் செடியை தமிழ்நாட்டில் இருந்து ஒழிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். எனவே பொது மக்களும் இளைஞர்களும் அந்தக் காரியத்தைச் செய்து மண்ணின் வளத்தையும் மனிதர்களின் ஆரோக்கியத்தையும் காப்பாற்ற வேண்டும்.


அ.மௌலீஸ்வரன்

இளங்கலை ஆங்கில இலக்கியம் முதலாமாண்டு


## பொது அறிவு

1. இந்தியாவின் மிக உயரமான போர்க்களம் எது?

விடை: சியாச்சென் பணியாறு (கர்நாடகா)

2. தோட்டா கண்டுபிடித்தவர் யார்?

விடை: கிளாட் மினி

3. ஏர்பிரேக் கண்டுபிடித்தவர் யார்?

விடை: ஜார்ஜ் வெஸ்டிங்ஹவஸ்

4. இந்தியாவின் மிகப்பெரிய குகைக் கோயில் எது?

விடை: எல்லோரா (மகாராஸ்ட்ரா)

5. மருத்துவத்திற்கான நோபல் பரிசை பெற்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் நபர் யார்?

விடை: ஹர்கோவிந்த குரானா

6. "DTALE OF TWO CITIES"புத்தகத்தின் ஆசிரியர் யார்?

விடை: சார்லஸ் டிக்கன்ஸ்

7. பிரான்ஸ் நாட்டின் தேசிய மலர் எது?

விடை: லில்லி

8. ஆர்டிக் கடல் அளவு?

விடை: 18,456

9. அட்லாண்டிக் பெருங்கடல் அளவு?

விடை: 30,246

10. பூண்டு வாசனை வீச காரணமாக இருப்பது எது?

விடை: ஒரு கந்தக கலவை

11. போக்குவரத்து காவலர்களே இல்லாத நாடு எது?

விடை: சிலோன் கெஜட்

12. சீனாவின் புனித விலங்கு எது?

விடை: பன்றி

13. கிரிக்கெட் மட்டை எந்த மரத்தால் தயாரிக்கப்படுகிறது?

விடை: வில்லோ மரம்

14. பேருந்து போக்குவரத்து முதலில் எந்த நாட்டில் தொடங்கப்பட்டது?

விடை: பிரான்ஸ் - 1819

15. உஸ்தாத் சுல்தான் கான் இசைக்கும் இசைக்கருவி எது?

விடை: சாரங்கி

16. பள்ளிக்கூடத்தை முதன் முதலில் உருவாக்கியவர்கள் யார்?

விடை: ரோமானியர்கள்

17. முகப்பவுடரை கண்டுபிடித்த நாடு எது?

விடை: இத்தாலி

வெங்டேசன்

இளங்கலை முதலாமாண்டு ஆங்கிலம்

# பொது அறிவு

1. புதன் கிரகத்தில் 1 நாள் என்பதற்கு பூமியில் எத்தனை நாள்களுக்குச் சமம்?

   விடை: 180 நாட்கள்

2. இந்தியாவின் எந்த மாநிலத்தில் தேசிய கீதம் ஆரம்பிக்கப்பட்டது?

   விடை: கேரளா

3. சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலை தொடங்கப்பட்ட ஆண்டு எது?

   விடை: 1923

4. மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதப்பயிற்சி தரும் நாடு எது?

   விடை: ஜப்பான்

5. உலகச் சுற்றுச்சூழல் தினம் எது?

   விடை: ஜூன் 5

6. ஒலிம்பிக் கொடி எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டது?

   விடை: 1920 ஆம் ஆண்டு

7. குஜராத்தில் உள்ள புகழ் பெற்ற நடனம் எது?

   விடை: தாண்டியா

8. நாய்க்கு உள்ள மொத்த பற்கள் எத்தனை?

   விடை: 42 பற்கள்

9. உலகின் இரண்டாவது பெரிய நாடு எது?

   விடை: கனடா

10. அமிலங்களின் சுவை என்ன?

    விடை: புளிப்பு

செ.ரஞ்சனி

இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

# விடுகதைகள்

1.கடல் நீரில் வளரும், மழை நீரில் மடியும் - அது என்ன?

விடை: உப்பு

2. பார்க்க ஐந்து கால், எண்ணினால் நாலு - அது என்ன?

விடை: யானை

3. தாத்தா கையில் கைத்தடி, அதைக் கடித்தால் இனிக்கும் - அது என்ன?

விடை: கரும்பு

4. தாயின் வாயில் பிறப்பது, தரணி எங்கும் சிறப்பது - அது என்ன?

விடை: தாலாட்டுப் பாடல்

5. இரு கொம்புகள் உண்டு, மாடு அல்ல. வேகமாக ஓடும், மான் அல்ல. கால் உண்டு, மனிதன் அல்ல - அது என்ன?

விடை: சைக்கிள்

6. தாழ்ப்பாள் இல்லாத கதவு, தானாக மூடித் திறக்கும் கதவு - அது என்ன?

விடை:இமை

7. ஓடியும் வருவான், உருண்டும் வருவான் - அவன் யார்?

விடை: சைக்கிள்

8. ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய மூட்டை - அது என்ன?

விடை: மிளகாய்

மு.இந்திரா

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## அம்மா

அழகான
உணர்வான
ஒற்றைச்சொல் ‘அம்மா’
அம்மா
பிறந்தவுடன் சொன்னதும்
உயிரை வலியோடு முடிக்கும் போது
சொல்வதும் அம்மா

செ.கவிப்பிரியா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## மனித உரிமை

மனித உரிமை
ஆகாயம் காற்று நீர்
அக்னி நிலமென்னும்
இயற்கைக் கொடைகள்
இறைவன் தந்த உரிமை!
சமுதாய நலத்துக்காகச்
சட்டமியற்றி
அரசு தந்த சுதந்திரம்
அதுதான் மனித உரிமை!
மேடைகளில் பேசுவதிலும்
ஏடுகளில் எழுதுவதிலும்
வாக்குரிமை தன்னை

வன்முறையாய் பெறுவதிலும்
அரசியல் கட்சிகள்
ஆதாயம் தேடும் நிலையில்...
மனித உரிமைச் சட்டத்தின்
மாண்புதனைச் சிந்தித்தால்
சுதந்திர உணர்வலைகள்
சூழும் நம் இதயத்துள்!!!

பி. ஐஸ்வர்ய லட்சுமி
இளம் அறிவியல் உயிர்தொழில்நுட்பவியல் இரண்டாமாண்டு

## தேசியக்கொடி

தியாகி மனம் வேண்டுமென்று
காவி நிறம் கொண்டாயோ?
தூய மனம் வேண்டுமென்று
வெள்ளை நிறம் கொண்டாயோ?
பசுமை வளம் வேண்டுமென்று
பச்சை நிறம் கொண்டாயோ?
தர்மம் தலை காக்கும் என்று
தர்ம சக்கரம் கொண்டாயோ?
ஓங்கி உயர்ந்த கம்பத்தில்
நீ பட்டொளி வீசிடுவாய்!
நூறு கோடி கரங்களால்
நீ போற்றப் பட்டிடுவாய்!
வேற்றுமையில் ஒற்றுமை
நாடெங்கும் கொண்டிருவாய்!

வேற்று நாட்டு சதிகளை
வேரோடு களைந்திடுவாய்!
தலைகீழாய் கொடியேற்ற
அனுமதிக்க மட்டோம்!
கோடி மீது சிறு கீறல் விழுந்தால்
பொறுக்கமாட்டோம்!
ஏன் என்றால்
நீ இந்தியர்களின்
தேசியக்கொடி மட்டும் அல்ல...
எங்கள் ஒவ்வொருவரின்
தொப்புள் கொடி!

வி. நரேந்திரன்
இளம் அறிவியல் உயிர் தொழில் நுட்பவியல்

## உழவர்

வேர்வையில் குளிக்கும்
அந்த விவசாயிக்கே
பரிசாகக் கொடுக்கத்
தண்ணீரும் கிடைக்கவில்லை
ஏனோ,

வறுமையில் வாடும்
அந்த விவசாயியின்
அழுகுரலைக் கேட்க
நேரமின்றி போனது
ஏனோ

நமது பசிக்கெனக்
கரைந்தானே விவசாயி
நம் மனம்
இரங்க மறுப்பது
ஏனோ,

பழமும் அரிசியும்
கொடுத்த விவசாயிக்கு
பூச்சி மருந்து கொடுத்தது
ஏனோ,

பணப் பசிக்கென
பசுமையைக் கொன்று விட்டோம்
இனி
விவசாயின் உயிரையும் பறிப்பதேனோ
உணவு கொடுத்த
கடவுள் அவர்கள், நாம்
வணங்க மறந்தது ஏனோ!!!

வீ.சௌந்தர்யா
இளங்கலை உயிர்தொழில்நுட்பவியல் இரண்டாமாண்டு

## அலைச்சல்

அலைச்சல்
இக்கரைக்கும் அக்கரைக்கும்
பரிசல் ஓட்டிப்
பரிசல் ஓட்டி

எக்கரை

எக்கரை என்று

மறக்கும்

இடையோடும் நதி

மெல்லச் சிரிக்கும்.

சு.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## தகுதி

என்ன செய்து கொண்டு

இருக்கிறாய் இப்போ?

என்று நானும்

இனிமேல் கேட்கலாம்

எனக்கு வேலை கிடைத்து விட்டது.

சு.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

